தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சனிக்கிழமை, *1982* ஏப்ரல் *3.*

பங்குனி *21*, துன்மதி-திருவள்ளுவர் *2013.*

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவை தலைவர் :

பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்
நன்கு செலச்சொல்லா தார்.''

நல்ல அறிஞரின் அவையில் நல்ல பொருளைக் கேட்பவர் மனத்தில் பதியுமாறு சொல்ல முடியாதவர் பல நூல்களைக் கற்றாலும் பயன் இல்லாதவரே.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

Steel Allotted for the first Quarter of 1981 - 1982

*Q,No. 738: THIRU P. VENKATASUBRAMANIAM: will the Hon. the Minister for Rural Industries be pleased to state:

a) the quantity of steel allotted for the first quarter of 1981-1982;

b) the quantity earmarked for small scale industries in the state; and

c) whether any representation to the Central Government has been made for increasing the allotment?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) *4,647* டன்கள்.

(ஆ) மூலப்பொருட்கள் தேவைக்காக சிட்கோவிடம் பதிவு செய்யப்பட்ட சிறுதொழில் நிறுவனங்களுக்கு மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட முலப்பொட்களை, உற்பத்தியாளர்களிடமிருந்து பெற்று சிட்கோ நிறுவனம் சிறுதொழில் நிறுவனங்களுக்கு மட்டும் விநியோகித்து வருகிறது.

(இ) ஆம்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தமிழ்நாட்டில் எவ்வளவு யூனிட்கள் இருக்கின்றன? அந்த யூனிட்களுக்கு எவ்வளவு தேவைப் படுகிறது? மத்திய அரசு எவ்வளவு அலாட்மென்ட் செய்திருக் கிறார்கள்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ; தமிழ்நாட்டுக்கு இரும்பு, எஃகு பொருள்களை மூலப்பொருள்களாகக் கொண்டு இயங்கும் 220 க்கு மேற்பட்ட சிறுதொழில் நிறுவனங்கள் அவற்றின் இரும்பு, எஃகு பொருள்களின் தேவைக்கு சிட்கோ விடம் பதிவு செய்து கொள்கிறார்கள். 1981—82 ம் ஆண்டின் இரும்பு, எஃகு பொருள்களின் மொத்தத் தேவை 1,07,000 மெட்ரிக் டன்னாகும். நடப்பாண்டுக்கு டெல்லியிலிருந்து ஒதுக்கப் பட்டுள்ள அளவு 32,000 டன்,

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : இந்த ஒதுக்கீடுகள் எந்த அடிப்படையில் செய்யப்படுகிறது? நம்முடைய தேவைக்கு கிட்டத் தட்ட 50 சதவீதம் குறைவாகத்தான் மத்திய அரசு ஒதுக்கியிருக் கிறது. எனவே நம் முழுத் தேவையையும் பூர்த்தி செய்ய நம் மாநில அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : முழுத் தேவையையும் இன்று மத்திய அரசின் ஒதுக்கீடு நிறைவேற்றவில்லை என்றாலும் தொடர்ந்து நம் தேவைக்கேற்ப வற்புறுத்தி வருகிறோம், முயன்று வருகிறோம்.

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களுக்கு நிர்வாகக் குழுக்கள் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 739—திரு. மா. சின்னராசு : மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:—

(அ) மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங் களின் நிர்வாகக் குழுக்கள் எப்போது போடப்படும்?

(ஆ) நிர்வாகக்குழு நியமனம் செய்வதற்கு தடை எதுவும் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) பால் பெருக்குத் திட்டம் செயல்படும் ஒன்பது மாவட்டங்களில், ஏழு மாவட்டங் களின் நிர்வாகக் குழுக்கள் தற்போது இயங்கி வருகின்றன. மற்ற இரு மாவட்டங்களில் நிர்வாகக் குழுக்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) தடை ஏதுமில்லை.

திரு. மா. சின்னராசு : அந்த இரண்டு மாவட்டங்களில் ஒன்றான கோவை மாவட்டத்தில் தற்போது அதன் தனி அதிகாரி யாக மாவட்ட ஆட்சித் தலைவர் இருக்கிற காரணத்தால் அவர் களுக்கு இருக்கிற மற்றப் பணிகளோடு இதையும் சேர்த்துச் செய்வது என்பது இந்த ஒன்றியத்தின் வளர்ச்சிக்குஇடர்ப்பாடாக இருப்பதால் பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் பொறுத்த வரையில், 1977-ல் இருந்து 1980 வரை இருந்ததுபோல் நியமன உறுப்பினர்களை நியமித்து அந்த நிர்வாகக் குழுக்களை வெகு விரைவில் ஏற்படுத்த அரசு முன்வருமா?